# பொதுமக்களின் பயன்பாட்டிற்காக

# பாடாங் மெர்போக் திடல் திறக்கப்படும்



கோலாலம்பூர், ஆக. 21-

உடற்பயிற்சி உட்பட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொதுமக்களுக்கு பாடாங் மெர்போக் திடல் திறந்து விடப்படவேண்டும்.

பொதுமக்கள் அங்கு நுழைய மறுக்கும் வகையில் மூடப்பட்டிருக்கும் எல்லா கதவுகளையும் திறந்து விட வேண்டும் என்று கூட்டரசு பிரதேச அமைச்சர் ஸலேஹா முஸ்தபா கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக கோலாலம்பூர் மாநகராட்சி மன்றத்திற்கு நான் உத்தரவு பிறப்பித்திருக்கிறேன் என்று நேற்று தமது முகநூலில் வெளியிட்ட செய்தியில் அவர் கூறினார்.

கோலாலம்பூர் மாநகரின் வரலாற்று சிறப்புமிக்க பகுதிகளில் ஒன்றாக பாடாங் மெர்போக் விளங்குகிறது. அது மாநகரின் அடையாள சின்னங்களில் ஒன்றாகும்.

குறிப்பிட்ட சிலர் மட்டுமே அங்கு நுழைவதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதற்கு பல தரப்பினர் நீண்ட காலமாக ஆட்சேபித்து வருகின்றனர். உடல் பயிற்சி உட்பட பொழுது போக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுமக்களுக்கு அந்த திடல் திறந்து விடப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றன. இனி பொதுமக்களும் அந்த திடலில் நுழைவதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது என்று ஸலேஹா கூறினார்.

மேலும் அந்த இடத்தில் உள்ள கழிப்பறைகள் உட்பட எல்லா அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும். பொதுமக்களுக்கு தரமான சேவை வழங்கப்பட வேண்டும் என்று பாடாங் மெர்போக் நிர்வாகத்தை கேட்டுக்கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.